**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

**OS 152/2019**

31.07.2025

**<u>வா.சா.1 செங்குட்டுவன் த/பெ. துரைராஜ் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

வழக்கானது என் தாயார் தான் தாக்கல் செய்தார். என் தாயார் தற்போது உயிருடன் உள்ளார். இன்றிலிருந்து 6 , 7 மாதங்களுக்கு முன்பு என் தாயார் எனக்கு பவர்பத்திரம் எழுதிக்கொடுத்தார். வழக்கிற்கான அத்தனை விபரங்களும் வழக்கறிஞருக்கு என் தாயார் தான் சொன்னார். வழக்கில் என் தாயார் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியலை நான் பார்த்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் சரியானவைதான். ஐய்யாவு வைத்தியர் என் தாய்வழி பாட்டன் என்றால் சரிதான். அவர் இறந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அவர் மனைவி நாகம்மாள் இறந்து எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் அதுவும் 30 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். ஐய்யாவு - நாகம்மாள் தம்பதியருக்கு மரகதம், யசோதா, பத்மாவதி, என் தாயார் சரோஜா , வடிவேல் , சுந்தர்ராஜன் மொத்தம் 6 பேர் 2 ஆண்கள் 4 பெண்கள் ஆவார்கள். இதில் என் தாயார் சரோஜாவை தவிர மற்ற வாரிசுகள் இறந்துவிட்டார்கள். ஐய்யாவு வைத்தியரிடம் என்ன என்ன சொத்துகள் இருந்தது என்றால் வழக்கு சொத்துகள் இருந்தது போக 3 ½ ஏக்கர் நிலம் இருந்தது. சுந்தர்ராஜன் 2014 ல் இறந்தார், வடிவேல் 2018 ல் இறந்தார். இந்த வழக்கில் 11 முதல் 13 பிரதிவாதிகள் இறந்த சுந்தர்ராஜன் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் தான் இந்த வழக்கை நடத்திவருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் தற்போது 11 முதல் 13 பிரதிவாதிகளிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் என் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா ஐய்யாவு உயிருடன் இருக்கும்போதோ அல்லது அவர் இறந்தபின்போ எங்கள் குடும்பத்தில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டதா என்றால் இல்லை. என் தாத்தா ஐய்யாவு மற்றும் அவர் மனைவி நாகம்மாள் பெயரில் சொத்துகள் எதுவும் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துபார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தா ஐய்யாவு வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலம் என் மாமா வடிவேலுக்குரிய நிலம் என்றால் சரிதான். வடிவேல் பெயரில் தான் பதிவு செய்யப்பட்ட ஆவணம் இருந்தது என்றால் சரிதான். வடிவேல் உயிருடன் இருக்கும்போதே கிருஷ்ணசாமி என்பவர் மகன் கோபிக்கு கிரயபத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். இரண்டு மாமாவும் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கிரயத்தை ஆட்சேபித்து இந்த வழக்கில் என் தாயார் தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. அந்த சொத்தை ஏன் சேர்க்கவில்லை என்றால் என் மாமா விற்பனை செய்தது தெரியாது. 11 முதல் 13 பிரதிவாதிகள் 2019 லே கோபிக்கு சொத்து வடிவேல் விற்பனை செய்தது தொடர்பாக

தெரிவித்தும் மேற்படி கோபியை ஏன் வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் இருக்கிற சொத்தில் தருவதாக சொன்னதால் சேர்க்கவில்லை. வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆவணம் 28.04.1962 ல் வடிவேல் பெயருக்கு சீனிவாச ஐயங்கார் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் என் மாமா வடிவேல் பெயரில் உள்ளது என்றால் சரிதான். என் மாமா வடிவேல் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை தன் தம்பி சுந்தர்ராஜனுக்கு வா.சா.ஆ. 2 யை கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அவ்வாறு கொடுக்கவில்லை. வா.சா.ஆ. 2 யை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் வழக்கின் விபரங்கள் தெரியவந்ததால் தாக்கல் செய்தோம். வா.சா.ஆ. 2 ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆண்டு 1996 என்றால் சரிதான் 30 ஆண்டுகளாகிவிட்டது என்றால் சரிதான். சுந்தர்ராஜன் இறந்தபின்பு அவரது வாரிசுகள் அனைவரும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பாகவிடுதலைப்பத்திரம் தன்னுடைய தாயாருக்கும் உடன் பிறந்த சகோதரருக்கும் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. வடிவேல் எழுதிக்கொடுத்த கிரயம் மற்றும் சுந்தர்ராஜன் இறந்தபின்பு அவர் வாரிசுகள் எழுதிக்கொடுத்த பாகவிடுதலைப்பத்திரம் ஆகியவற்றை பொறுத்து 2019 ம் ஆண்டிலே இந்த பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தெரிவித்த பின்பும் நாங்கள் அதுதொடர்பாக எந்த மறுப்பும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. சாட்சி தற்போது எதிர்வழக்குரையை படித்துபார்க்கவில்லை என்கிறார். 1962 ல் வடிவேல் பெயரில் ஏற்பட்ட கிரயபத்திரம் உண்மையானது என்றால் சரிதான். வடிவேல் இளவராக இருந்து பெற்ற சொத்தை அவர் மேஜரான பின்பு அடைந்து சர்வசுதந்திரமாக அனுபவித்து வந்த சொத்தை பொறுத்து அவர் உடன்பிறந்த அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் தாத்தா தான் வடிவேல் பெயரில் சொத்து வாங்கினார். வழக்கு சொத்துக்கான விபரங்கள் என் தாயார் சொன்னது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து என் தாத்தா ஐய்யாவு சுயமாக சம்பாதித்த பணத்தை கொண்டு வாங்கியது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வடிவேல் பெயரில் பெயரளவிலான கிரயபத்திரத்தை என் தாத்தா வாங்கினார் என்பதற்கும் எந்தவிதமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு பாகப்பிரிவினை கிடைப்பதாக இருந்தால் என் பாட்டனார் இறந்து 12 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றாலும் ஆனால் 30 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் காலவரம்பு சட்டம் படி என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வடிவேல் சுந்தர்ராஜன் பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரயத்தை ஆட்சேபித்து மற்ற சகோதர சகோதரிகளுக்கு அந்த ஆட்சேபணையும் செய்யமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினோமா என்றால்

இல்லை. வழக்கு சொத்தில் யாரிடம் பாகப்பிரிவினை கேட்டோம் என்றால் முதலில் வடிவேலிடம் கேட்டோம் அப்போது வடிவேலு சொத்து தன்னிடம் தான் உள்ளது என்றும் சொத்தை பாகம்பிரித்து தருவதாக சொன்னார். எப்போது அவ்வாறு பாகப்பிரிவினை வடிவேலை பார்த்து கேட்டோம் என்றால் 2016 - 2017 ல் கேட்டோம். அப்போது சொத்தை பொறுத்து வில்லங்க சான்று எடுத்துபார்த்தோமா என்றால் இல்லை. அவ்வாறு வில்லங்கசான்று எடுத்துபார்த்திருந்தால் 1996 லே சுந்தர்ராஜ் பெயருக்கு வடிவேலு கிரயம் கொடுத்த விபரம் எங்களுக்கு தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. வடிவேல் சுந்தர்ராஜ் பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரயம் மோசடியானது என்று எங்கள் வழக்கில் சொல்லியுள்ளோம். ஆனால் அந்த கிரய பத்திரத்தை மோசடியானது என்றோ ரத்து செய்யவேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளோமா என்றால் இல்லை. அந்த பத்திரம் சொத்தின் உண்மையான உரிமையாளர் வசமிருந்து சுந்தர்ராஜன் கிரயம் பெற்றுள்ளதால் அதை ஆட்சேபிக்க உரிமையில்லாததால் தான் வழக்கில் பரிகாரம் கேட்டகவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 25 செண்ட் ஆகும். வழக்கு சொத்தில் மாடி வீடு உள்ளது. வீடானது எத்தனை சதுரஅடி என்றால் அதுபற்றி தெரியாது. வீடு உள்ளது மட்டும் தெரியும். சுமாராக எத்தனை சதுர அடி இருக்கும் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்து விபரத்தில் வீடு உள்ளதை மறைத்து காலிமனையாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் காலிமனையில் மட்டும் பாகம் கேட்டதால் வீட்டை சொல்லவில்லை. வீடானது 25 செண்டிற்கு நடுவில் உள்ளது என்றால் அல்ல ஓரமாக தான் உள்ளது. வேலியிருந்து எத்தனை அடியில் வீடு உள்ளது என்றால் வீடு ஒரு பகுதியிலும் காலி மனை 3 பகுதியாகவும் உள்ளது. நான் வழக்கில் சொல்லியுள்ள 25 செண்ட் என்பது அந்த வீட்டையும் உள்ளடக்கியதாகும். வழக்கு சொத்தில் உள்ள ரூ. 60 லட்சத்திற்கும் மேற்பட்ட மதிப்புள்ள வீட்டை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது பாகப்பிரிவினைக்கு உட்படுத்த வேண்டிய சொத்து இல்லை என்றாலும் அந்த சொத்து வடிவேலு மூலமாக சுந்தராஜனுக்கு கிரயம் பெற்றவுடன் சுந்தர்ராஜ்க்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 1996 ல் பெறப்பட்ட கிரயத்தை 2019 ல் ஆட்சேபிக்க என் தாயாருக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

**14 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தனர்.**

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.